**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 18.06.2025**
**OS. No. 23/2014**
**வழக்கு சாட்சி PW.1–மகாலிங்கம் , த/பெ.கண்ணுபையன்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

வா.சா.ஆ.13 கிரைய ஆவணம் பொன்னம்மாள் என்பவர் சதாசிவம் மற்றும் பரமசிவம் ஆகியோரிடமிருந்து ச.எண்.534/3 ல் கண்ட 2.18 ஏக்கர் நிலத்தில் 2/6 பங்கு கிரையம் பெற்றுள்ளார். அந்த ஆவணத்தில் ச.எண்.534/3 ல் உள்ள கிணறு, துளை ஆகியவற்றில் 2/6 பங்கு பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பொன்னம்மாள் எங்கள் பக்கத்து நிலத்துக்காரர் ஆவார். வா.சா.ஆ.14 கிரைய ஆவணமானது தனலட்சுமியம்மாள் கிருஷ்ண கவுண்டருக்கு ச.எண்.534/3 ல் கண்ட 0.30 செனட் நிலத்தை கிரையம் கொடுக்கப்பட்ட ஆவணம் ஆகும். வா.சா.ஆ.15 கிரைய ஆவணமானது 1ம் பி ரதிவாதியின் மாமியார் மாதம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதில் ச.எண்.534/3 ல் 2.18 ஏக்கர் நிலத்தில் பாதி 1.09 ஏக்கர் நிலத்தில் 1/3 பங்கான 0.36–1/4 செனட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.16 ஆவணத்தில் ச.எண்.534/3C ல் மாதம்மாள், பரமசிவம், சுந்தர்ராஜ கவுண்டர், சதாசிவம், பழனிகவுண்டர் மனைவி தங்கம்மாள் ஆகியோர் பெயர்கள் உள்ளது. அந்த ஆவணத்தில் ச.எண்.534/3C ல் எங்கள் பாட்டியின் பெயரை தவிர மற்ற நபர்களின் பெயருக்கு தந்தை பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.17 கிரைய ஆவணமானது சிவசாமி நடராஜன் மற்றும மாதம்மாள் ஆகியோர்கள் தங்கமாளுக்கு ச.எண்.534/2 ல் உள்ள கிணற்றில் 1/3 பங்கு கொடுத்தற்கான ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் இந்த வழக்கு சொத்திற்கு சம்மந்தமற்றது என்றால் சரியல்ல. ச.எண்.534/2 ற்கு நாங்கள் இந்த வழக்கு தாக்கல செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.18 பட்டாவானது 1 முதல் 3 பிரதிவாதிகளின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.19 கிரைய பத்திரமானது பொன்னம்மாள் என்பவர் 2, 3 பிரதிவாதிகளின் தாத்தா நடராஜன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம்

என்றால் சரிதான். வா.சா.ஆ.18 பட்டா மற்றும் வா.சா.ஆ.19 கிரைய பத்திரமும் ச.எண்.534/3B மற்றும் ச.எண்.534/2 ஆகியவற்றிற்கு சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். அது தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்டது இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.21 வரைபடம் நாங்கள் தயார் செய்தவை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரின் வரைபடத்துடன் வா.சா.ஆ.21 வரைபடம் ஒத்துபோகவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் எங்கள் விருப்பத்திற்கு வா.சா.ஆ.21 வரைபடம் தயார் செய்துள்ளோம் என்றும், அது ஆணையரின் வரைபடத்திற்கும் சர்வேயர் வரைபடத்திற்கும் ஒத்துபோவில்லை என்றும், அதை ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சுவாதீனத்திலுள்ள சொத்தில் என் பாட்டி தங்கம்மாள் பெயர் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளதால் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள் என்றும், அந்த வரைபடம் ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.23 ஆவணமானது 1ம் பிரதிவாதியின் மாமியார் மாதம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் தாவா சொத்தின் கிணறு சம்மந்தப்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் ச.எண்.534/3 ல் உள்ள கிணற்றில் 1/4 பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த ஆவணம் எழுதி வைக்க அவர்களுக்கு உரிமை இல்லை, அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சக்கு பந்தி ச.எண்.534/2 ற்கு உரியது ஆகும். வா.சா.ஆ.23 பத்திரத்தில் தெளிவாக ச.எண்.534/3 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதற்கு மாறாக நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதில் கிணறு பாகம் மற்றும் நிலம் 0.02 சென்ட் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த ஆவணங்களின் படி மாதம்மாளுக்கு கிணற்றில் இருந்த பங்கை அவரது கணவர் என் பாட்டி தங்கம்மாளுக்க விற்றுவிட்டார். அதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன், அவ்வாறு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட மாதம்மாள் மற்றும் அவரது கணவர் எக்காலத்திலும் எங்களுக்கு கிரையம் கொடுக்கவில்லை என்றும், அவர்கள் உயிருடன் இருந்த வரை அவர்கள் அனுபவத்தில் தான் இருந்தது என்றும், அதன் பிறகு 1 முதல் 3 பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் உள்ளது என்றால் சரியல்ல. அந்த ச.எண்.534/3C ல் கண்ட சொத்தை

1ம் பிரதிவாதியின் மாமியார் மாதம்மாள் கலையரசி, ராணி ஆகியோர்கள் தாக்கல் செய்த அ.வ.எண்.225/1998 மற்றும் அவ.எண்.215/1998 ஆகிய வழக்குகளில் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாகி உள்ளது என்றும், மே.மு.எண்.26/2001 மற்றும் மே.மு.எண்.27/2001 ஆகிய வழக்குகளும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாகி உள்ளது என்றால் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது வழக்கு நடைபெற்ற விவரம் எங்களுக்கு தெரியாது. அந்த தீர்ப்புகள் தற்போது வரை அமலில் உள்ளதாகவும், அதன் அடிப்படையில் தவா சொத்துக்கள் 1 முதல் 3 பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. அவர்கள் அனுபவத்திலுள்ள இடத்திற்கு நாங்கள் சுவாதீனம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.10 வரை உள்ள வருவாய் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள மற்ற நபர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1970ம் வருடத்திலிருந்து தாவா சொத்தில் நாங்கள் அனுபவத்திலுள்ளதற்கு ஏதேனும் சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். அந்த அடங்களில் என் பாட்டியின் பெயரோ, என் தந்தையின் பெயரோ இல்லைல என்றால் சரிதான், எங்கள் சொத்தை விற்ற சிவசாமி பெயரில் உள்ளது. 1992ம் வருடத்தில் தாவா சொத்து என் தந்தை பெயருக்கு வாய்மொழி பாகமாக கொடுக்கப்பட்டது. அடங்களில் யார் அனுபவத்திலுள்ளார்களோ அவர்களின் பெயர் தான் வரும் என்றால் சரிதான், பட்டா மாறாததால் எங்கள் நிலத்திற்கு சிவசாமி பெயரில் உள்ளது. எங்கள் அனுபவத்தில் இல்லாததால் தான் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் மாதம்மாள் பெயரிலும், அவர் இறந்த பிறகு 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் பெயரிலும் உள்ளது என்றால் சரியல்ல. ச.எண்.534/3C ல் உள்ள கிணற்றிற்கு 1985ம் வருடம் மின் இணைப்பு பெறப்பட்டது. அந்த மின் இணைப்பு மாதம்மாள் பெயரில் பெறப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு மின் இணைப்பு 1 முதல் 3 பிரதிவாதிகளின் பெயரில் உள்ளது என்றால் சரிதான், தவறாக வாங்கிவிட்டார்கள். மாதம்மாள் என்பவர் தான் உண்மையான உரிமையாளர் என்பதால் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், நாங்கள் அனுபவத்தில் இருந்திருந்தால் என் தகப்பானாரோ, என் பாட்டியோ 1985லிலேயே ஆட்சேபனை செய்திருப்பார்கள் என்றும், நாங்கள் யாரும் அவ்வாறு சுவாதீனத்தில் இல்லாததால் தான் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால்

சரியல்ல. என் பாட்டி மற்றும் தந்தை உயிருடன் இருந்த காலத்திலும், எனகக்கு நினைவு தெரிந்த காலத்திலும் இந்த வழக்கை தவிர வேறு ஏதேனும் மின் இணைப்பு சம்மந்தமாக ஆட்சேபனை தெரிவித்தோமா என்றால் இல்லை, தற்போது தான் எங்களுக்கு தெரியவந்தது. தாவா சொத்தில் உண்மையில் நாங்கள் அனுபவத்தில் இருந்திருந்தால் மின் இணைப்பு யார் பெயரில் இருந்தது என்று தெரிந்திருக்கும் என்றும், நாங்கள் அனுபவத்தில் இல்லாததால் தான் எங்களுக்கு தெரிவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் A செட்டியூல் சொத்தில் நாங்கள் சக்குபந்தி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் புறம்போக்கு நிலத்திற்கு மேற்கு, செம்ப கவுண்டர் நிலத்திற்கு வடக்கு, மாதம்மாள் நிலத்திற்கு கிழக்கு, பொன்னம்மாள், மாதம்மாள் நிலத்திற்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிணறு என்று எங்கும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அந்த இடம் கிரையம் பெற்ற பிறகு தான் கிணறு வெட்டினோம். நான் சொல்வது தவறு என்றும், மாதம்மாள் கிரையம் பெற்றபோதே கிணறு இருந்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எங்களுக்கு கிணறு பாத்தியம் இல்லை என்றும், அதனால் தான் அதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தான் கிணறு வெட்டினோம் என்பதை காண்பிக்க ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோமா என்றால் கிணற்றின் சுற்று சுவரில் அது கட்டப்பட்ட வருடம் குறிப்பிட்டுள்ளது, அதற்கான புகைப்படத்தை தாக்கல் செய்துள்ளோம். நாங்கள் தாக்கல் செய்த புகைப்படங்கள் இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரையப்பத்திரத்தில் கிணறு குறித்து எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திலுள்ள கிணற்றை நாங்கள் தண்ணீர் பாத்தியத்தை நாங்கள் விலைக்கு வாங்கியதாக சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்ததாக நாங்கள் பிராதில் சொல்லியதற்கு நாங்கள் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். அந்த புகாரின் நகலையோ, புகார் ஏற்பு சான்றிதழையோ நீதிமன்றத்தில தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். தாவா சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகளின் நிலம் என்றும், 1 ம் பிரதிவாதி திருக்செங்கோட்டில் பணி புரிந்து வருகிறார் என்றும், 3 ம் பிரதிவாதி 19.01.2014 ம் தேதியில் எல்லாம்

வெளிநாட்டில் இருந்தார் என்றும், நான் வழக்கிற்காக பொய்யான சங்கதிகளை பிராதில் தெரிவித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1 முதல் 3 பிரதிவாதிகள் விலைக்கு கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றும், அது அவர்களுடைய நிலம் என்றால் சரியல்ல. சுமார் 45 வருடங்களாக தாவா சொத்திற்கான மின் இணைப்பு பிரதிவாதியின் மூதாதையர் பெயரிலும், அதன் பிறகு 1 முதல் 3 பிரதிவாதிகளின் பெயரிலும் உள்ளது என்றும், புதியதாக அவர்களது பெயரில் மின் இணைப்பு வழங்கப்பட்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாய்மொழியாகவும், எழுத்துமூலமாகவும் பிரதிவாதிளின் மீது மனுக்கள் கொடுத்துள்ளேன். அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ச.எண்.534/3C ன் மொத்த விஸ்தீரணம் 0.52 சென்ட் மட்டும் தான் என்றும், 30.10.1969 லேயே 0.36–1/4 சென்ட் இடத்தை 1ம் பிரதிவாதியின் மாமியார் மாதம்மாள் கிரையம் பெற்றுவிட்டார் என்றும், நிலையில் இல்லாத கூடுதல் நிலத்தை என் பாட்டி கிரையம் பெற்றதாக சொல்லி, இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், நாங்கள் நிலத்தை வாங்கும் போதே தகுந்த ஆவணங்கள் மற்றும் அதன் அளவுகளை சரிபார்த்து வாங்கவேண்டிய கடமை உள்ளது என்றும், அவ்வாறு சரிபார்த்து வாங்காததால் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளுக்கு நாங்கள் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. கூட்டு பட்டாவாக உள்ளதால் துர்லாபம் அடைவதற்காக தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.17 ன்படி ச.எண்.534/2 ல் உள்ள கிணற்றில் 1/4 பங்கு தான் என் பாட்டிக்கு பாத்தியம் என்றும், ச.எண்.534/3C ல் எங்களுக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் மாமியார் மாதம்மாளின் உண்மையான வாரிசுதாரர்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் என் தந்தை இறப்பதற்கு முன்பு 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் என்னை பற்றி சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அதில் நான் தான் அவர்களுக்கு இடைஞ்சல் செய்ததாகவும், அதனால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. என்னை கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்து, எழுதி வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னுடைய நிலத்தை மயானத்திற்காக எடுத்துக்கொண்டார்கள்

என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. ச.எண்.534/3 ல் உள்ள மொத்த சொத்தை அளப்பதற்காக நான் மனு செய்யவில்லை என்றால் சரிதான். மொத்த நிலத்தை அளந்தால் எங்கள்நிலம் மயானத்திற்கு எடுத்தது தெரிந்துவிடும் என்பதால் தான் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அனுபவத்திலுள்ள சொத்திற்கு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அது அவர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. உண்மையான உரிமையாளருக்கு எதிரான நான் எந்த பரிகாரமும் கோர இயலாது என்றால் சரியல்ல. நான் உண்மையயை மறைத்து பொய்யான சங்கதிகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளதை தெரிந்ததால் தான் என் தாயார் மற்றும் சகோதரர்கள் வழக்கு நடத்த வரவில்லை என்றும், அதனால் தான் அவர்கள் பிரதிவாதிகள் 8 முதல் 10 ஆக காண்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் பாட்டிக்கோ, தந்தைக்கோ தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும், அதனால் நான் எந்த பரிகாரமும் கோர இயலாது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சங்கதிகள் குறித்து எந்த விவரமும் தெரியாது என்றும், அதனால் தாவா வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

4 முதல் 7 பிரதிவாதிகள் மீது என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், எங்கள் கிணறுக்கு தவறான பெயரில் வழங்கபட்ட மின் இணைப்பை ரத்து செய்யவேண்டும் என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கை முதலில் என் தந்தை தாக்கல் செய்தார். அவர் இறந்துவிட்டதால் தற்போது நான் நடத்தி வருகிறேன். என் அப்பாவிற்கு மொத்தம் நான்கு வாரிசுகள் ஆகும். மற்ற வாரிசுகளுடன் எனக்கு சரியான பேச்சுவார்த்தை இல்லை, அதனால் அவர்களை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன். 1 முதல் 3 பிரதிவாதிகள் எனது உறவினர்களா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் என் பாட்டிக்கு ச.எண்.534/3C ல் 0.09 சென்ட் நிலம் கிரையம் மூலம் பாத்தியம் ஆகும், ச.எண்.534/3C ல் 0.13 சென்ட் நிலம் கிரையம் மூலம்

என் பாட்டிக்கு பாத்தியமாகும், அதன் பிறகு என் அப்பாவிற்கு வாய்மொழியாக பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது. 1 முதல் 3 பிரதிவாதிகளின் சொத்துக்களின் சர்வே எண்.534/3 ல் கண்ட 0.36–1/4 சென்ட் மற்றும் ச.எண்.534/4 ல் கண்ட 0.90 சென்ட் நிலம் ஆகியவை ஆகும். 1 முதல் 3 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற பிறகு தான் என் பாட்டி சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் ஒரே நபரிடம் தான் கிரையம் பெற்றோமா என்றால் இல்லை. ச.எண்.534/3 ன் உரிமையாளரின் பெயர் ஆண்டியப்ப கவுண்டர்ஆகும், அவர் இறந்த பிறகு அந்த சொத்தை அவரது வாரிசுகள் பாகம் பிரித்து கொண்டனர். அந்த வாரிசுகளின் பெயர்கள் நடராஜன், சுந்தரராஜன் ஆகும். பிறகு நடராஜன் இறந்துவிட்டார் அவரது வாரிசுகளின் பெயர் பரமசிவம், சதாசிவம், சாம்பசிவம் ஆகும். நாங்கள் சுந்தரராஜன் மற்றும் அவர்களின் மகன்கள் சிவசாமி, சிவஞான சுந்தரம் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றோம். 1 முதல் 3 பிரதிவாதிகள் சாம்பசிவத்திடம் கிரையம் பெற்றனர். நாங்கள் கிரையம் பெற்றபோது அந்தசொத்தில் கிணறு இல்லை. நாங்கள் தான் கிணறு வெட்டினோம். அதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தற்போது அந்த கிணறு ச.எண்.534/3C ல் நாங்கள் கிரையம் பாகத்தில் உள்ளது. அந்த கிணற்றுக்கு மின் இணைப்பு 1985 ல் கொடுத்துள்ளார்கள், அதை பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மூலம் தெரிந்துகொண்டேன். நாங்கள் இவ்வழக்கை 2014 ம் வருடம் தாக்கல் செய்தோம். அந்த சமயத்தில் எனக்கு 36 வயது ஆகும். அந்த கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்கியபோது எனக்கு 7 வயது இருக்கும். என் தந்தைக்கு 45 வயது இருக்கும். 1985 ல் கொடுக்கப்பட்ட மின் இணைப்பிற்கு 2014 ல் நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு காலதோஷ சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1985 ம் வருடத்தில் தாவா சொத்திற்கான சர்வே எண் 534/3C ஆக உட்பிரிவு ஆனது, அதற்கான ஆவணத்தையும் நான் தாக்கல் செய்துள்ளேன். மோசடியான மின் இணைப்பு கொடுத்ததாக சொல்வதற்கு ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1 முதல் 3 பிரதிவாதிகள் எங்களுடைய நிலத்தையும் சேர்த்து சிறு, குறு விவசாய சான்றிதழ் பெற்று அதன் அடிப்படையில் மின் இணைப்பு பெற்றுள்ளார்கள் அதை நான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திலுள்ள கிணற்றை தற்போது நாங்கள் தான் பயன்படுத்தி

வருகிறோம். நாங்கள் கிணற்றை வெட்டிய காலத்திலிருந்து நாங்கள் தான் பயன்படுத்தி வருகிறோம். தாவா கிணறு 1971ல் வெட்டினோம். 1 முதல் 3 பிரதிவாதிகள் எக்காலத்திலும் தாவா கிணற்றின் அனுபவத்தில் இல்லை. நாங்கள் தாவா கிணற்றிற்கு அருகாமையில் உள்ளோம். 1 முதல் 3 பிரதிவாதிகள் வெளியூரில் குடியுள்ளார்கள். அவர்கள் அவர்களது நிலத்தை குத்தகைக்கு விட்டுள்ளார்கள். 4 முதல் 7 பிரதிவாதிகள் 1985ல் மின் இணைப்பு வழங்கியபோதே முறையான ஆவணங்களாள பட்டா, பத்திரம், அனுபவம் ஆகியவற்றை பரிசீலனை செய்யாமல் வழங்கப்பட்டதாக பிராதில் சொல்லியுள்ளோம். எனக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் உள்ள தனிப்பட்ட பிரச்சனையின் காரணமாகத்தான் 4 முதல் 7 பிரதிவாதிகளான அரசு அதிகாரிகளை இவ்வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. 4 முதல் 7 பிரதிவாதிகள் மின் வாரிய சட்டத்திற்குட்பட்டு நேரில் வந்து ஆய்வு செய்து, ஆவணங்களை பரிசீலனை செய்து தான் மின் இணைப்பு வழங்குவார்கள் என்றால் சரிதான். அவ்வாறு தான் தாவா சொத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்களது தனிப்பட்ட பிரச்சனை சம்மந்தமாக வழக்கு தாக்கல செய்யப்பட்டுள்ளதால் 4 முதல் 7 பிரதிவாதிகள் அவசியமற்ற தரப்பினர்கள் என்றும், அதனால் அவர்களுக்கு எதிராக எந்த பரிகாரமும் வழங்கப்பட இயலாது என்றால் சரியல்ல. 4 முதல் 7 பிரதிவாதிகள் ஆகியோர்களிடம் மனு கொடுத்ததற்கு ஆதரவாக ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அடிப்படை ஆதராமில்லாமல் தனிப்பட்ட பிரச்சனை காரணமாக அரசு அதிகாரிகளை இந்த வழக்கில் சேர்த்துள்ளதால், இந்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. காலவரையறை சட்டப்படியும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.